

ஓவியம்: ஜே.கே.

# பகிராத அன்பு

கடந்து போன
தீபாவளிக்கு சேலையெடுத்துத்
தந்திருக்கலாம்
முழம் பூவிற்கு கொஞ்சம்
குறைந்த போது
முகத்தைத் தூக்காமல்
இருந்திருக்கலாம்..

பிரியமான மல்லிகையைத்
தினம் தந்து செல்லும் கையை
ஒரு முறையேனும்
ஆதுரமாய்ப் பற்றியிருக்கலாம்
எப்போதேனும்
இளைப்பாறத் தரையமர்ந்து
குளிர்ந்த நீர் மட்டும்
வேண்டி நின்றவரை
உள் அழைத்து ஒரு வேளை
உணவு பரிமாறியிருக்கலாம்

அழகான பூச்சரம் கொண்டு
ஆண்டவரை அலங்கரித்து
பார்த்த வேளையில்
அவருக்காகவும் சிறு பிரார்த்தனை
செய்திருக்கலாம்..

முந்தாநாள் சாயங்காலம்
பிள்ளையார் கோயில்முன்
மோட்டார்பைக்கில் அடிபட்டு
பொட்டென்று போய்விட்டார்
வாடிக்கையாய் வீட்டுக்கு வரும்
பூக்கார ஆயா..
அவர் தொடுக்காமல்
விடுத்த பூக்களைப் போல்
வாசம் மாறாமல்
வதைக்கின்றது
பகிராமல் விட்டு விட்ட
அந்நியோன்னிய அரவணைப்பு...

# ஆச்சிக்குத் திதி

ஆச்சிக்கு திதியாம் இன்று..
மொட்டைமாடியில் காகத்திற்காய்
காத்துக் கொண்டிருந்தது
அவளுக்கென இட்ட படையல்...

அவள் உண்டு வாழ்ந்த
அத்தனை பதார்த்தங்களோடும்
அறுசுவை உண்டிகளோடும்..

உடலை ஊடுருவி
சுட்டெரித்தது
மதிய வேளைச் சூரியனின்
கொடும் வெப்பம்...

அதையும் கொஞ்சம் எடுத்து
இலையில் வைத்தாலென்ன..
இருபது வயதில் விதவையான அவள்
எத்தனை இரவுகளில்
இது போன்ற வெக்கையை
தின்று செரித்திருப்பாள்..

- லதா அருணாச்சலம்

# கடந்து போன கடவுள்

■ சு. இந்துமதி

வியர்வையில் நசுங்கிய பஸ்பயணம்...
கூட வரும் இளையராஜாகூட
பிடிக்கமுடியாத தொனியில் கூட்டம்..
கூட்டத்தில் இடிக்கும் வெள்ளை
மனிதர்கள்.. அவர்கள் வாய்ப்பினை
பயன்படுத்திக்கொள்ள முறைக்கிறேன்..
எங்கோ பார்க்கிறார்கள்...
"டிக்கெட் டிக்கெட்" என்றபடி
ஊடுருவும் கண்டக்டர்.. தன் பங்கிற்கு
கூடுதல் இடியாய், ..
பேருந்தில் வெளிப்புறத்தில்
சுதந்திரமாய் பட்டாம்பூச்சி.. அதற்கு
நிச்சயமாய் குறிப்பிட்ட நேரத்திற்குள்
எங்கும் செல்லவேண்டிய நிர்ப்பந்தம்
இருந்திருக்காது...



ஓவியம்: விஸ்வம்

எல்லாவற்றையும் பொறுக்கும்
மன தைரியம் வேலைக்குச் செல்வதால்
வேண்டிருக்கிறது...
வழியில் நிற்கும் சாமிக்கு
கும்பிடு போட நினைக்கையில்,
கடவுளும் கூட சட்டென்று
கடந்து விடுகிறார்..
ஏக சோகத்தில் எதையோ இழந்த
முகமாய் வீட்டிற்கு வரும்
நம்மிடம், அப்பா.. "பசிக்குதாம்மா,
தோசை சுட்டுத்தரவா"
என்று கேட்டுக்கொண்டே
தேநீரோடு தோசையும் கொணரும்பொழுதில்...
எங்கோ கடந்து போன
கடவுள் இங்கே நிற்பார்..